**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 6/2023**

**Date :18.03.2026**

**வா.சா. 1 -முத்துநாடார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் எனது வீடு இருக்கும் இடத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1982. மேற்படி இடத்தில் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 1983. பிரதிவாதியின் தாயார் பெருமாள் பிள்ளை எந்த வருடம் தெற்கு பக்கம் உள்ள இடத்தை வாங்கினார் என்றால் 1982. பிரதிவாதியின் இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ள பாதை எத்தனை வருடமாக உள்ளது என்றால் நாங்கள் வாங்கும் சமயத்தில் இருந்தே இருந்து வருகிறது, மேற்படி பாதை நடந்து போய் வரக்கூடிய பாதையாக இருந்தது. தற்போது எத்தனை வருடங்களுக்கு முன்பாக மேற்படி பாதை 8 அடி பாதையாக மாறியது என்றால் 4 வருடங்களுக்கு முன்பாக.

எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி புத்தளம் ரோட்டிற்கு செல்லும் பாதை நடந்து போய் வரக்கூடிய பாதையாக இருந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதையை தான் நான் இடம் வாங்கிய சமயத்தில் இருந்து பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எனது வீட்டிற்கு மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதையை தான் நான் இடம் வாங்கிய சமயத்தில் இருந்து 39 வருடமாக பயன்படுத்தி வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி பிரமாண வாக்குமூலம் நான் விவரம் கூறி தயார் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதைக்கு மேற்கு

பக்கம் வேல்பாண்டியன் சொத்தில் காம்பவுண்ட் சுவர் உள்ளது கிழக்கு பக்கம் பிரதிவாதி சொத்து காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதை வழியாக தான் எனது வீட்டிற்கு மின் இணைப்பு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதை வழியாக தான் எனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதை எனது வீட்டிற்கு பின்புறம் வந்து சேருகிறது என்றால் சரிதான்.

பிரதிவாதி தாயார் அவரது நிலத்தில் எப்போது வீடு கட்டினார் என்றால் நான் கட்டிய பின்பு உடனே அவரும் கட்டி விட்டார். மேற்படி வீடை பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு இஸ்டதானமாக எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி மேற்கு பக்கமாக இருக்கும் 4 அடி பாதை வழியாக தான் எனது வீட்டிற்கு தற்போது சென்று வருகிறேன் என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதால் மேற்படி மேற்கு பாதையை பயன்படுத்தி வருகிறேன். பிரதிவாதி தாயார் வீடு கட்டும் சமயத்திலேயே காம்பவுண்ட் சுவர் எழுப்பி கேட் அமைத்து விட்டார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாசாஆ 1ல் தென் பாதியில் கிழக்கற்றத்தோடு பாதை செல்லும்அவகாசம் உட்பட என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 11 பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் தென்பாதிக்கு வடபாதியில் கிழக்கற்றத்தோடு பாதை செல்லும் அவகாசம் உட்பட என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆகையால் பிரதிவாதிக்கு தான் பாதை அவகாசம் என்றால் சரியல்ல. வாசாஆ 4 முதல் வாசாஆ 6 ல் கொடுத்த புகார்கள் அனைத்தும் பொய் புகார் என்றால் சரியல்ல. காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்த்துவிட்டு என்னை தான் சத்தம் போட்டார் என்றால்

சரியல்ல. மேற்படி புகார்கள் பொய் புகார் என்பதால் காவல் துறையினர் மேற்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 8 அடி பாதையை எந்த காலத்திலும் பயன்படுத்தவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் இவ்வழக்கில் செயலுறுத்து கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் எவ்வித அடிப்படையும் இன்றி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் வழக்குப் பட்டிகை சொத்தின் எல்லையாக குறிப்பிடப்பட்டுள்ளது எனது சொத்தின் எல்லை என்றால் சரிதான். நான் கேட்டதற்கு உண்ட பரிகாரத்திற்கும் மேற்படி சொத்து விவரத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை கஷ்டப்படுத்தும் நோக்கில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**